யா/வல்வை

# சிவகுரு வித்தியாசாலை

வல்வெட்டித்துறை

பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன்

# பரிசளிப்பு விழா - 2008/2009

**காலம் : 10.10.2009 சனிக்கிழமை**
**நேரம் : காலை 9.00 மணி**

தலைவர்
*திரு. ஆ.சிவநாதன் அவர்கள்*
(அதிபர்)

பிரதம விருந்தினர்
**திரு. இ.வரதீஸ்வரன் அவர்கள்**
(பிரதேச செயலர், பருத்தித்துறை.)

சிறப்பு விருந்தினர்
**திரு. பா.இரகுநாதன் அவர்கள்**
(கோட்டக்கல்வி அதிகாரி, பருத்தித்துறை)

கௌரவ விருந்தினர்
**திரு. பூ.அகமணிதேவர் அவர்கள்**
(செயலாளர், வல்வை ஒன்றியம்)

பரிசில் வழங்கல்
**திருமதி. உமா வரதீஸ்வரன் அவர்கள்**

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்

# யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை
# வல்வெட்டித்துறை.

பரிசளிப்பு விழா 2008/2009
காலம் :-10-10-2009 சனிக்கிழமை மு.ப 9.00மணி

## நிகழ்ச்சிகள்

9.00மணி - பான்ட் வாத்திய இசையுடன் விருந்தினர் அழைப்பு
9.15மணி - மங்கல விளக்கேற்றல்
9.20மணி - இறைவணக்கம்
9.30மணி - ஆசியுரைகள்
1.சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர்
2.பிரம்மஸ்ரீ மனோகரக் குருக்கள்
9.40மணி - வரவேற்புரை
திருமதி. ந.திருநாவுக்கரசு
9.50மணி - அதிபர் அறிக்கை
10.20மணி -பரிசளிப்பு
திருமதி. உமா வரதீஸ்வரன்
11.20மணி -சிறப்பு விருந்தினர் உரை
திரு. பா.இரகுநாதன் அவர்கள்
(கோட்டக் கல்வி அதிகாரி பருத்தித்துறை)
11.30மணி -பிரதம விருந்தினர் உரை
திரு. இ.வரதீஸ்வரன் அவர்கள்
(பிரதேச செயலாளர் பருத்தித்துறை)
11.45மணி -நன்றியுரை
திருமதி. ச.புலந்திரலிங்கம்
12.15மணி -கலைநிகழ்வுகள்
2.00மணி -பாடசாலை கீதம்

# யா/வல்லை சிவகுரு வித்தியாசாலை பரிசளிப்பு விழா 2008/2009
## பாடசாலை அதிபரின் அறிக்கை

மதிப்பிற்குரிய சிவஸ்ரீ.தண்டபாணிக தேசிகர் அவர்களே மதிப்பிற்குரிய பிரம்மஸ்ரீ.மனோகரக் குருக்கள் அவர்களே மதிப்பிற்குரிய பிரதம விருந்தினர் பருத்தித்துறை பிரதேச செயலாளர் திரு.இரா.வரதீஸ்வரன் அவர்களே அவர்தம் பாரியார் திருமதி உமா வரதீஸ்வரன் அவர்களே சிறப்பு விருந்தினர் பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி திரு.பா.இரகுநாதன் அவர்களே கௌரவ விருந்தினர் வல்லை ஒன்றிய செயலாளர் திரு.பூஅகமணிதேவர் அவர்களே. வருகை தந்துள்ள கல்வி அதிகாரிகளே ஆசிரிய ஆலோசகர்களே, பிற பாடசாலை அதிபர்களே ஆசிரியர்களே, பழைய மாணவர்களே பெற்றோர்களே! எமது பாடசாலை ஆசிரியர்களே மாணவர்களே நலன் விரும்பிகளே அனைவருக்கும் அன்பு கனிந்த காலை வணக்கங்கள் உரித்தாகுக.

வரலாற்றுச் சிறப்பும் செயற்பாட்டு முதன்மையும் பெற்றிருந்த இக்கல்விச் சாலையின் பரிசளிப்பு விழா-2008 அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது பாடசாலை வளர்ச்சிபெற வசதிகள் ஏற்படுத்த வேண்டி முன்வந்தவர் சைவச் சான்றோனாகத் திகழ்ந்த தையல்பாகனார் ஆவர். இவர் தமது குடியிருப்போடிணைந்தவாறு சிதம்பராவை ஆரம்பித்தார் சிதம்பரா ஆங்கில பாடசாலையாக இருக்க தமிழுஞ் சைவமுந் தழைத்திட வென்று சிவகுருவித்தியாலயம் என்ற திருநாமம் சூட்டப்பெற்று எமது வித்தியாலயம் இயங்கி வந்தது. இது 1904ம் ஆண்டாக அமையலாம் எனக் கருதப்படுகிறது. சிவனுக்குரித்தான இடத்தில் உப தேசப்பணி செய்த காரணத்தால் 'சிவகுரு' என்ற நாமம் சூட்டப்பட்டதாக கூறுவர்.

இவ்வாறு தோற்றம் பெற்ற எமது பாடசாலை பல்வேறு இன்னல்களுக்கிடையிலும் தனித்துவத்தைப் பேணி வளர்ச்சி பெற்றுவந்தது.

இவ்வாறு வளர்ச்சி பெற்று வந்த காலத்தில் 26.12.2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் போது எமது பாடசாலையின் பௌதீக வளம் முழுமையாக அழிவடைந்தது. இந்நிலையில் எமது பாடசாலையை அவ்விடத்தில் அமைப்பதில் பொருத்தமற்றதன்மை முன்வைக்கப்பட்டமையால் வேறு இடங்களில் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிவடைந்தது. இந்நிலையில் பழைய இடத்தில் புதிய கட்டிடத்தொகுதியை அமைப்பதற்கு அனுமதி கிடைத்தபோது 24 வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடிக்கட்டிடத்திற்கான திட்டம் வரையப்பட்டு 2006ம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் UNICEF கட்டிடத்தைக் கட்டித்தருவதற்கு வேலையை ஆரம்பித்தது. ஆனால் 2006ம் ஆண்டு ஆகஸ்ட் மாதமகளில் நாட்டில் அசாதாரண சூழல் ஏற்பட்டமையால் வேலைகள் தடைப்பட்டது.

அக்காலப்பகுதியில் எமது பாடசாலை வைத்தீஸ்வரர் தேவஸ்தானம் தங்கவேலாயுதம் மடத்திலும் நகரசபை மடத்திலும் சிவன்கோயில் தனியாருக்குச் சொந்தமான காணியில் செயற்பட்டுவந்தது.

இந்நிலையில் கட்டிட வேலைகளை முடிக்காத நிலையில் UNICEF அமைப்பினர் திட்டமிட்ட கட்டிடத்தொகுதியில் அதிபர் விடுதி, கூட்டமண்டபம் என்பவற்றின் வேலைகளை முடித்து ஆறுவகுப்பறை வேலைகளை ஓரளவு பூர்த்தி செய்து 07.02.2008 அன்று பால்காச்சி சம்பிரதாயபூர்வமாக பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டோம். அத்துடன் இக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட சமையலறை 07.02.2008ம் திகதி உலக உணவுத்திட்டப்பணியாளர் திரு.முகமட் சாலிகீன் அவர்களால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இருக்கின்ற கட்டிடத் தொகுதிகளையும் தற்காலிக கொட்டகைகளையும் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டதுடன் புதிய கட்டிடத்தொகுதி யாழ். அலுவலக UNICEF தலைவர் Dr. தயானி அராக்கி அவர்களால் 06.09.2008 அன்று திறந்து வைக்கப்பட்டது. தற்போது 16 வகுப்பறைகள் அவசியமாக அமைத்திருந்த போதும் இருக்கின்ற கட்டிடத் தொகுதிகளைப் பயன்படுத்தி கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகிறோம்.

இந்நிலையில் தற்போது நாட்டில் சுமூக நிலை ஏற்பட்டுள்ளதால் கட்டிட வேலைகளை செய்து தருமாறு வேண்டியபோது இன்னும் எட்டு வகுப்பறைகளைக் கட்டித்தருவதற்கு UNICEF அமைப்பினர் முன்வந்து அதற்குரிய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமைக்கு எமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது பாடசாலை சுனாமியால் அழிவடைந்தபோது மாணவர்களின் கற்றல் செயற்பாடு தடையின்றி செயற்படவேண்டும் என்பதற்காக பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும்

உள்நாட்டவர்களும் மாணவர்களுக்கு உதவிகளை வாரி வழங்கியதுடன் தளபாடம் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கிய அனைத்து உயர்ந்த உள்ளங்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டினை ஊக்குவிக்கவேண்டும் என்பதற்காக சுண்டிக்குளி மகளிர் கல்லூரி சமூகம் கற்றல் உபகரணங்களை வழங்கியதுடன் 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு 2007ம் ஆண்டு வரை வினாத்தாள் பயிற்சித்தாள்களை வழங்கி ஊக்குவித்தமை நன்றியுணர்வுடன் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். அத்துடன் தற்போதும் எமது பாடசாலையில் கல்வி கற்றுவரும் இரு குடும்பத்தின் பிள்ளைகளுக்கு நிதியுதவி செய்கின்றமை பாராட்டுக்குரியதாகும்.

அதே போன்று 2007ம் ஆண்டு யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றிய மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூபா 10000/- பெறுமதியான உணவுப் பொருட்களை வழங்கியதுடன் கற்றல் உபகரணங்களையும் நிறைவாக வழங்கியதுடன் தரம் 9,10,11 மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புப்பணம் வழங்கி அனுசரணை வழங்கியமையும் நன்றியுணர்வுடன் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

அதே போன்று 2008ம் ஆண்டு ZOA அமைப்பினர் தரம் 11 மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் பாடங்களுக்கு மேலதிக வகுப்புகளுக்காக அனுசரணை வழங்கி ஊக்குவித்தமை பாராட்டுதற்குரியதாகும்.

பன்முகவரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2007ம் ஆண்டு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. கி.சிவநேசன் அவர்கள் தளபாடக் கொள்வனவிற்காக ரூபா 50000/- வையும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர். திரு. S.ரவிராஜ் அவர்கள் பான்ட் வாத்தியக் கருவிகளுக்கான ரூபா 75000/- வையும் ஒதுக்கி மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்காக உதவியமைக்காக அவர்களுக்கு உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதே போன்று 2009ம் ஆண்டு பன்முகவரவு செலவுத் திட்டத்தின்கீழ் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் ஒலி பெருக்கிக்காக ரூபா 75000/- வை ஒதுக்கித் தந்தமையால் இன்று பாடசாலையில் வகுப்பறைகளுக்கு ஒலிபெருக்கிசாதனங்களைப் பொருத்தி நவீனமயப்படுத்தியுள்ளோம். இவ்வகையில் இவ்வுதவியை வழங்கிய அவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தொவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் 2009ம் ஆண்டு பன்முக வரவு செலவுத்திட்டத்தின் கீழ் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.ம.சிவாஜிலிங்கம் அவர்கள் அலுவலக தளபாடக் கொள்வனவிற்காக ரூபா 100000/- வை ஒதுக்கித்தந்துள்ளார். அதற்கான கொள்வனவு ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பன்முகவரவு செலவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீட்டினை வழங்கிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வல்வெட்டித்துறையில் செயற்பட்டு வரும் வல்வை ஒன்றியம் பாடசாலையின் கல்விச் செயற்பாட்டில் மிகுந்த பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இற்றைவரை இரண்டு தொண்டர் ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு பணத்தை வழங்கிவருகின்றனர். அத்துடன் பாடசாலைக் கட்டிடத் திறப்பு விழாவிற்காக ரூபா 5000/- வையும் 2008ம் ஆண்டு வழங்கியதுடன் 2009ம் ஆண்டு பாடசாலை தொலைபேசி (CDMA) யைப் பெறுவதற்கு அனுசரணையாக ரூபா 8535/- வையும் மாகாண மட்ட விளையாட்டுப்போட்டியில் மாணவர் பங்குபற்ற ரூபா 3000/- வையும் வழங்கி ஆதரவு நல்வியமைக்கு உமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலையின் சுத்தம் சுகாதார நடவடிக்கைகள் நீர் விநியோகம் போன்றவற்றில் வல்வெட்டித்துறை நகரசபையினரின் சேவை பாராட்டுதற்குரியதாகும். எமது பாடசாலை இடம் பெயர்ந்திருந்தபோது எவ்வித கட்டணமுமின்றி குடிநீர் வசதியை வழங்கியமைக்கு என்றும் நன்றியுடையவர்களாக இருப்பதுடன் இவற்றைச் செயற்படுத்திய நகரசபை செயலாளர் அலுவலர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் இடம்பெயர்ந்திருந்து பழைய இடத்திற்கு வருகை தருவதற்கு தளபாடங்களை எவ்வித கட்டணமுமின்றி ஏற்றி இறக்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்து தந்த நகரசபைச் செயலாளர் ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் பாடசாலையின் இவ் அமைவிடத்தில் செயற்பட ஆரம்பித்த போது கிணற்றுநீர் வற்றியபோது பெரும் இடர்பாபாடு ஏற்பட்டது. இந்நிலையில் கிணற்றுக்குள் குழாய்க்கிணறு அமைத்து நீரைப் பெறுவதற்கு பின்வருவோர் நிதி அனுசரணை வழங்கி குழாய்கிணறு அமைக்கப்பட்டது.

திரு. மா.ரமணாகரன் - 5000.00
திரு. உ.தீபன் - 10000.00
திரு. ந.பால்ராஜ் - 3000.00

இவர்களுக்கும் எமது உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பாடசாலையில் இயங்க ஆரம்பித்தபோது மாணவர்களுக்கான சைக்கிள்பாக் ஒன்று அவசியமாக அமைந்தது இவ் வகையில் எமது பிரதேச கிராமசேவகர் திரு. தவனேஸ்வரன் அவர்கள் மூலம் பெற்றுத்தந்த ரூபா 15000/- சைக்கிள் பாக் அமைப்பதற்கு பேருதவியாக அமைந்தது இதற்காக அவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்பாடசாலை செயற்பட ஆரம்பித்த போது மாணவர்களின் தளபாடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக வலயக்கல்வி அலுவலகத்தின் பணிப்பின் பேரில் NECORD ரூபா 724600/- வை ஒதுக்கி தளபாடத்தேவையை பூர்த்தி செய்தமை பாராட்டுதற்குரியதாகும். இவ்வகையில் நிதி அனுசரணை வழங்கிய NECORD நிறுவனத்திற்கும் மேற்பார்வை செய்து நெறிப்படுத்திய பொறியியலாளர் அலுவலர்களுக்கும் எமது உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் பாடசாலை சுனாமியினால் இடம் பெயர்ந்த போது இலண்டனில் வசிக்கும் வைத்தியக் கலாநிதி திரு. தான் முத்துவேல் அவர்கள் 5 கணனிகளையும் ரைப்பிறைற்ரர் மெசின் 1யும் அன்பளிப்பாக வழங்கியமையை நன்றியுடன் நினைவுகூறுகிறோம். அதற்கு மேலாக மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவினைத் தரமாக வழங்க வேண்டும் என்பதற்காக 2009 செப்டெம்பர்மாதம் தொடக்கம் ஒரு நாளைக்கு 400/- வீதம் வழங்க அவரும் அவரது குழுவினரும் இசைந்து செயற்படுத்த ஆரம்பித்துள்ளனர். இவ்வகையில் வெளிநாட்டில் வசித்துவந்த போதும் எமது மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுத்தும் அவர்களின் திட்டத்திற்காக பாடசாலைச் சமூகம் அவர்களுக்கு உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது பாடசாலையில் இன்றுவரை செயற்பட்டு வரும் ஒரு கணனியை வழங்கிய திரு கனகரட்ணம் சிவசுதன் (நெல்லியடி) அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வரும் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடு போற்றுதற்கும் பாராட்டுதற்குமுரியதாகும். பாடசாலையின் 2008ம் ஆண்டு 2009ம் இல்ல விளையாட்டுப்போட்டிக்கான நிதி அனுசரணையை பழைய மாணவர்சங்கமே முழுமையாக வழங்கியிருந்தது. மேலும் பாடசாலையின் புதிய கட்டிடத்தின் பால் காச்சுதல், புதிய கட்டிடத் திறப்பு விழா, மாணவர்களை போட்டிகளுக்கு அழைத்துச் செல்லுதல் ஆகிய நடவடிக்கையில் பக்கபலமாக இருந்து செயற்பட்டதுடன் நிதி அனுசரணையாக 2008ம் ஆண்டு 221,966/- வை வழங்கி எமக்கு உற்சாகத்தை வழங்கியமைக்காக எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதே போன்று பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வலுவாக செயற்பட்டு வருவதுடன் பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வரும் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இப்பாடசாலையின் அலுவலகம் பாதுகாப்பின்மையுடன் காணப்பட்டதால் பாதுகாப்பதற்கான ஏற்பாடாக யன்னல்களிற்கு கதவு போடுவதற்கு வலயக்கல்வி அலுவலகத்தினால் ரூபா 124,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஒத்தாசையாக அமைந்த வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், கட்டிடப்பகுதி அலுவலர்கள் அனைவருக்கும் எமது உள்ம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது பாடசாலை செயற்பட ஆரம்பித்த போது காகங்கள் புறாக்கள் என்பவற்றால் வகுப்பறைகள் அசிங்கப்படுத்தப்பட்டது. இந்நிலையில் எமது வேண்டுதலை ஏற்று திரு.து.முருகவேள் அவர்களும் நண்பர்களும் பிரார்த்தனை மண்டபத்தைச் சுற்றி தமது செலவிலேயே நூல் வலையமைத்தமை பாராட்டுக்குரியதாக அமைவதுடன் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக சுனாமியால் எமது பாடசாலை அழிவடைந்த போது புதிய கட்டிடத்தொகுதியை அமைக்க முன்வந்து செயற்பட்ட UNICEF அமைப்பினருக்கும் கட்டிட வேலைகளை மேற்கொண்ட UNOPS அமைப்பினருக்கும் பாடசாலைச் சமூகம் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

இப்பாடசாலையின் புதிய கட்டிடத்திறப்பு விழா 06.09.2008 அன்று நடை பெற்றபோது யாழ்ப்பாண UNICEF தலைவர் Dr. தயானி அராக்கி அவர்கள் திறந்து வைத்ததுடன் இவ்விழாவில் மூத்தபிரமுகர்களும் கலந்து சிறப்பித்ததுடன் கலைநிகழ்வுகளும் நடைபெற்றது. இவ்விழாவுக்கு பழைய மாணவர்சங்கம் ரூபா 50000/- வும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ரூபா 29300/- வும் வல்வெட்டித்துறை ஆராதனை சபை ரூபா 5000/- வும் அதிபர் ஆசிரியர்கள் ரூபா 4600/- வும் வல்வை ஒன்றியம் ரூபா 10000/- வையும் வழங்கி நிதி அனுசரணை செய்ததுடன் வல்வெட்டி ஒளியருவி நிறுவனம் VIDEO செய்து அன்பளிப்பும் செய்திருந்தனர். இவ்வகையில் திறப்பு விழா சிறப்பிக்க ஆதரவு வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## பாடசாலை மாணவர் தொகை - 2008

| | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 14 | 11 | 25 |
| 2 | 13 | 19 | 32 |
| 3 | 12 | 13 | 25 |
| 4 | 06 | 15 | 21 |
| 5 | 10 | 11 | 21 |
| 6 | 09 | 13 | 22 |
| 7 | 24 | 27 | 51 |
| 8 | 36 | 20 | 56 |
| 9 | 22 | 15 | 37 |
| 10 | 19 | 18 | 37 |
| 11 | 17 | 14 | 31 |
| | 182 | 176 | 358 |

## யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை

வல்வெட்டித்துறை

### 2006ம் ஆண்டு முதல் பாடசாலைக்கு வருகை தந்த ஆசிரியர்கள்

1) திரு. ஆ.சிவநாதன் (அதிபர்) - 01.10.2006
2) திருமதி. சு.ரகுநாதன் - 15.06.2007
3) திருமதி. ந.தகுக்கேசன் - 25.06.2007
4) செல்வி. சி.வாணி 2 நாட்கள் - 03.07.2007
5) செல்வி. அ.லலிதலக்சுமி
   பகுதிநேர ஆங்கில ஆசிரியர் - 04.07.2007
6) திருமதி. சி.ஜெகதீஸ்வரன் - 24.07.2008
7) திருமதி. சி.கிருஷ்ணகுமார் - 10.11.2008

### இணைப்பில் உள்ள ஆசிரியர்கள்

ஆரம்பம்

1) திரு. ஆ.சா.அரியகுமார் - 01.09.2006
2) செல்வி. ம.சுபத்திரா - 01.09.2006
3) திரு. பா.லோகநாதன் - 01.09.2006
4) திரு. ஆ.யோகேஸ்வரன் - 04.09.2006

5) செல்வி. அ.சின்னத்தம்பு - 04.09.2006
6) செல்வி. கு.சுவர்ணாம்பாள் - 04.09.2006
7) செல்வி. இ.ஸ்ரீலஷ்மி - 28.03.2007
8) செல்வி. கி.தேவகி - 01.01.2008
9) திரு. ந.செல்வக்குமார் - 01.01.2008
10) திரு. ப.ஜெயகரன் - 21.04.2008
11) திரு. கு.மனோகரன் - 05.01.2009
12) செல்வி. வி.விசாகரட்ணம் - 06.01.2009
13) திருமதி. த.காந்தரூபன் - 05.01.2009
14) திரு. சோ.சோமச்சந்திரன் - 30.01.2009

### பாடசாலையிலிருந்து சென்ற ஆசிரியர்கள்

1) திரு. வ.திருக்குமாரன் - 01.04.2006
2) திரு. த.தவேந்திரராசா - 28.06.2006
3) செல்வி. ச.கார்த்திகா
முகாமைத்துவ உதவியாளர் - 11.07.2007
4) செல்வி. சி.வாணி 2 நாட்கள் - 27.08.2007
5) திருமதி. சு.ரகுநாதன் - 08.10.2007
6) செல்வி. ப.ஞானானந்தராஜா - 02.06.2008
7) திருமதி. ம.திரிபுவனநாதன்
2 நாட்கள் - 02.10.2008
8) திருமதி. சி.கிருஷ்ணகுமார்
2 நாட்கள் - 18.03.2009

## பரீட்சைப் பெறுபேறுகள்

### *5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை*

| ஆண்டு | பரீட்சைக்குத்தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சதவீதம் |
|---|---|---|---|
| 2006 | 52 | 01 | 1.92 |
| 2007 | 19 | 03 | 15.78 |
| 2008 | 19 | 03 | 15.78 |

### *க.பொ.த சாதாரணதர பரீட்சை*

| ஆண்டு | பரீட்சைக்குத்தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சதவீதம் |
|---|---|---|---|
| 2006 | 27 | 12 | 44.44 |
| 2007 | 27 | 07 | 25.92 |
| 2008 | 31 | 08 | 25.80 |

**கண்காட்சி :**

எமது பாடசாலையில் 2006ம் 2007ம் 2008ம் ஆண்டு ஆகிய மூன்றாண்டும் 2ம் தவணை மாணவர்களின் ஆக்கத்தைக் கொண்டே கண்காட்சி நடைபெற்றது. இதில் மாணவர்களின் ஆக்கங்கள் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமைந்ததுடன் ஏனையமாணவர்களும் கல்விச் சமூகமும் பார்வையிட்டு பாராட்டும் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

**கணனிக் கற்கைநெறி :**

எமது பாடசாலையில் கணனி அறை இல்லாத போதும் கணனி அறை ஒன்று ஒதுக்கப்பட்டு இருக்கின்ற இரண்டு கணனிகளுடன் தரம் 10,11 மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இப்பாடங்கள் போதித்து வரும் செல்வி. சு.பத்மலதா, திருமதி. ந.குமுக்கேசன் அவர்கள் பணி பாராட்டுக் குரியதாகும். அலுவலக நிர்வாக நடவடிக்கைகளுக்காக செல்வி. சரண்யா யோகேந்திரன் அவர்களின் பணி பாராட்டுக்குரியதாகும்.

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் :**

2007, 2008, 2009ம் ஆண்டுகளில் இல்ல விளையாட்டுப்போட்டிகள் தீருவில் விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றன. எமது பாடசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாமை முக்கிய குறைபாடாகும். எமது சமூகம் இது தொடர்பாக சிந்திக்க வேண்டியது முக்கியமானதொன்றாகும்.

எமது பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் இல்லாத பொதும் எமது மாணவர்கள் விளையாட்டுத்துறையில் வலய, மாவட்ட மட்டங்களில் சாதனை படைத்துள்ளனர். ம.மாதுளானி 13 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான நீளம்பாய்தல் மாவட்ட மட்டத்தில் (2005) 1ம் இடத்தைப் பெற்றார். ந.நரேந்திரன் உயரம்பாய்தலில் வலயமட்டத்தில் 2005, 2006, 2007ம் ஆண்டுகளில் 2ம் இடத்தைப் பெற்றார். ந.பரந்தாமன் 13வயதுக் குட்பட்டபிரிவில் (2006) நீளம்பாய்தலில் 2ம் இடத்தைப் பெற்றார். 13 வயதுக்குட்பட்ட அஞ்சலோட்டத்தில் (2005) குழுவினர் 2ம் இடத்தைப்பெற்றனர். ந.பிரகலாதன் நீளம்பாய்தல் 13 வயதுப்பிரிவில் 2006ம் ஆண்டு வலயமட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றார். கரப்பந்தாட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் 2007ம் ஆண்டு எமது பாடசாலைக்குழுவினர் 2ம் இடத்தைப் பெற்றனர். 2008ம் ஆண்டு கு.சரண்யா, ம.மாதுளானி, பூதர்சிதா, ந.நரேந்திரன் ஆகியோர் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியதுடன் கு.சரண்யா வலயமட்ட சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார். செல்வி. கு.சரண்யா அவர்கள் 2008ம் ஆண்டு 400மீற்றர் ஓட்டநிகழ்வில் மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் அண்மைக்காலத்தில் இணைக்கப்பட்டிருந்த விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு.ப.ஜெயகரன் அவர்களின் வழிப்படுத்தல் பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

**சாரணர் இயக்கம் :**

எமது பாடசாலையில் சாரணர் இயக்கம் நீண்டகாலமாக செயற்பட்டு வருவதுடன் குருளைச் சாரணர் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு தற்போது திருமதி. விஜிதா இராஜஅரவிந்தனின் வழிப்படுத்தலில் செயற்பட்டு வருகிறது. சாரணர் பிரிவினை திரு. சி.சரவணன் அவர்கள் வழிப்படுத்தி வந்து தற்போது அவர் வெளிநாடு சென்றுள்ளமையால் ஆசிரியர் திரு. சோ.சோமசந்திரன் அவர்கள் வழிப்படுத்தி வருகிறார். அவருக்கு உதவியாக பழைய மாணவன் செல்வன் செ.துஜேந்திரன் செயற்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியதாகும். சாரணர்கள் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி சாதனை படைத்ததுடன் 2009ம் ஆண்டு இலங்கை சாரணர் இயக்கத்தின் மாவட்டமட்ட ரீதியிலான விளையாட்டுப் போட்டிகளில் அனைத்துப்பிரிவுகளிலும் பங்குபற்றி சிறப்பான இடங்களைப் பெற்று மாகாணமட்ட போட்டிகளில் பங்குபற்றினர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன் ஆலய மகோற்சவங்களிலும் சேவையாற்றியமை பாராட்டுக்குரியதாகும்.

**மன்றங்கள் :**

எமது பாடசாலையின் மாணவர்களின் பல்வேறு திறன்களையும் வளர்த்தெடுப்பதற்காக இந்து மாமன்றம், தமிழ் மன்றம், கணித-விஞ்ஞான மன்றம், சமூக சுகாதார மன்றம் ஆகியவை அவற்றுக்கு பொறுப்பான ஆசிரியர்களால் வழிப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**நூலகம் :**

எமது பாடசாலையில் நூலகத்துக்கென இடம் ஒதுக்கப்படாதபோதும் ஓர் அறை அதற்கென ஒதுக்கப்பட்டு 2000க்கு மேற்பட்ட புத்தகங்களைக் கொண்டு விளங்குவதுடன் எமது பாடசாலை நூலக ஆசிரியை திருமதி. சிவாஜினி திலகநாதன் அவர்களால் நூலக ஒழுங்குகளுக்கமைய நூலகத்தை செயற்படுத்தி வருவதுடன் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியதாகும்.

**பான்ட் அணி :**

எமது பாடசாலைக்கு வழங்கப்பட்ட பான்ட் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தி பாண்ட் வாத்திய அணியினர் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் பாடசாலையின் முக்கிய விழாக்களில் செயற்படுகின்றமை பாராட்டுக்குரியதாகும். இவ் அணியை நெறிப்படுத்தும் ஆசிரியை செல்வி.அ.சின்னத்தம்பு ஆசிரியர் திரு. சி.முரளிதரன் அவர்களின் பணி பாராட்டுக்குரியதாகும்.

**தமிழ் / ஆங்கில தினப் போட்டிகள் :**

எமது பாடசாலை மாணவர்கள் தமிழ்/ஆங்கில தினப் போட்டிகளில் பங்குபற்றி வலய, மாவட்டப் போட்டிகளிலும் சாதனை படைத்துள்ளனர். இவ்வகையில் 2009ம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் எமது பாடசாலைக் குழுவினர் மாவட்டப்போட்டியில் பங்குபற்றி வில்லிசையில் 2ம் இடத்தையும் சிந்துநடைக் கூத்து நிகழ்வில் 3ம் இடத்தையும் பெற்றமை பலராலும் பாராட்டப்பட்டது. இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர் திரு. கு.மனோகரன் திரு. கோ.சிவனேஸ்வரன், திருமதி. ம.அருந்தவராசா ஆகியோரின் பணியும் பாராட்டுக்குரியதாகும்.

**பாடசாலையின் எதிர்பார்ப்புகளும் வேண்டியவைகளும் :**

எமது பாடசாலை சுனாமியால் முழுமையாக அழிவடைந்து மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டமிடப்பட்டபோது நாட்டின் அசாதாரண சூழல் காரணமாக கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளது அவற்றை ஆரம்பித்த UNICEF அமைப்பினர் பூர்த்தி செய்து பாடசாலைச் செயற்பாடுகள் செவ்வனே நடைபெற வழிவகுக்க வேண்டியது முக்கியமான தொன்றாக உள்ளது. அத்துடன் நவீன கற்பித்தல் முறைகள் பயன்படுத்தப்படுவதற்கு கணனி அறை, நூலகம், செயற்பாட்டறை என்பன அமைக்கப்பட வேண்டியிருப்பதுடன் இவற்றுக்கான உபகரணங்களான கணனிகள், நூலக தளபாடங்கள், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள், போட்டோ பிரதி இயந்திரங்கள் போன்றவற்றைப் பெற வேண்டியதும் அவசியமாகவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் பாடசாலை மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதற்கான பணிகளை நெறிப்படுத்தும் வலயக் கல்விப் பணிப்பாளரின் பிரதிக்கல்விப்பணிப்பாளர்களின், பொறியியலாளர் அலுவலர்கள் அனைவருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

எனவே பாடசாலையின் மீள் கட்டுமானப்பணியைப் பூர்த்தி செய்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை துரிதப்படுத்த எமக்கருகிருந்து காத்துக் கொண்டிருக்கும் வைத்தீஸ்வரப் பெருமானையும் முத்துமாரி அம்மனையும் வேண்டி அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

*ஆ.சிவநாதன்*
அதிபர்

# பரிசளிப்பு விழா - 2008/2009

## பரிசுக்குரியோர் விபரம்

## பாடரீதியான பரிசுகள் :- 2008

| இல | பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| | | தரம் - 1 |
| 1 | உ. ஜனனன் | தமிழ், சமயம், சுற்றாடல், சிறப்புப்பரிசு |
| 2 | கு. லக்ஷன் | கணிதம் |
| | | தரம் - 2 |
| 1 | இ. பவிதா | தமிழ், சமயம், சிறப்புப்பரிசு |
| 2 | ம. திலக்சிகா | கணிதம் |
| 3 | பா. பிரியதர்சினி | சுற்றாடல் |
| | | தரம் - 3 |
| 1 | ஜெ. ஜெயதர்சினி | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், சிறப்புப்பரிசு |
| 2 | உ. பிரியங்கா | ஆங்கிலம் |
| | | தரம் - 4 |
| 1 | ச. சாந்தினி | தமிழ், சமயம், சுற்றாடல், ஆங்கிலம், சிறப்புப்பரிசு |
| 2 | ஸ்ரீ. தனுசிகா | கணிதம் |
| | | தரம் - 5 |
| 1 | உ. தனுஷா | தமிழ், கணிதம், |
| 2 | ப. கோபிநாத் | சமயம், ஆங்கிலம், சிறப்புப்பரிசு |
| 3 | செ. விதுஷன் | சுற்றாடல் |
| | | தரம் - 6 |
| 1 | சி. மகாலட்சுமி | சமயம், ஆங்கிலம், நடனம் |
| 2 | ஸ்ரீ. டிசாந்தி | தமிழ், ஆங்கிலம் |
| 3 | இ. சுபாசினி | கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வாழ்.தே+ குடியுரிமை, சங்கீதம், சுகா/உடற்கல்வி, பிரயோக தொழி.நுட்பம், பொதுத்திறமை. |
| 4 | கு. பிரசாந்தன் | சித்திரம் |
| | | தரம் - 7(A+B) |
| 1 | க. கேசவி | சமயம், ஆங்கிலம், கணிதம், புவியியல், வாழ்.தே+ குடியுரிமை, சுகா/உடற்கல்வி, பிரயோக தொழி.நுட்பம், பொதுத்திறமை. |
| 2 | கி. பிரியங்கா | தமிழ், விஞ்ஞானம், சங்கீதம், |
| 3 | நா. ஜதுர்சா | வரலாறு, நடனம் |
| 4 | ம. திவாகரன் | சித்திரம் |
| | | தரம் - 8(A+B) |
| 1 | பி. ஜோதிகா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், நடனம், பிரயோக தொழி.நுட்பம், பொதுத்திறமை. |
| 2 | இ. தமிழ்நிலா | வாழ்.தே+ குடியுரிமை, சித்திரம் |
| 3 | ச. உமைதினி | சங்கீதம் |
| 4 | தி. பிரசன்னா | சுகா/உடற்கல்வி |

| | | |
|---|---|---|
| **தரம் - 9** | | |
| 1 | பி. திவ்யா | சமயம், வரலாறு, சங்கீதம், பொதுத்திறமை. |
| 2 | வி. பவிதா | தமிழ், சித்திரம் |
| 3 | சி. சிவலோஜினி | ஆங்கிலம் |
| 4 | ர. குகன் | கணிதம் |
| 5 | சி. சாம்ஜெயவேல் | விஞ்ஞானம் |
| 6 | ஞா. வசந்தகுமார் | புவியியல், சுகா/உடற்கல்வி |
| 7 | வி. வினோதா | வாழ்.தே+ குடியுரிமை |
| 8 | ர. துர்ஷிகா | நடனம் |
| 9 | மூ. நிஷாந்தன் | செய்முறை தொழில்நுட்பம் |
| | | |
| **தரம் - 10** | | |
| 1 | ம. மாதுளானி | சமயம், தமிழ், ஆங்கிலம், வரலாறு, நடனம், பொதுத்திறமை., தகவல்தொ. நுட்பம் |
| 2 | பி. யோபிதா | கணிதம், வணிகக்கல்வி |
| 3 | செ. துவாரகா | விஞ்ஞானம், , தகவல்தொ. நுட்பம் |
| 4 | ஜெ. சுகன்யா | சங்கீதம் |
| 5 | க. விபூசுதன் | சித்திரம், முயற்சியாண்மை |
| 6 | க. பிரபாகரன் | கடல்வளம் |
| 7 | சி. கமலினி | புவியியல் |
| **தரம் - 11** | | |
| 1 | ப. வினோதிகா | சமயம், |
| 2 | பி. பிரதீபா | தமிழ், சங்கீதம், புவியியல் |
| 3 | இ. தனுசியா | ஆங்கிலம், கணிதம், சித்திரம் |
| 4 | ச. உதயசங்கர் | விஞ்ஞானம், வரலாறு, |
| 5 | செ. துஜேந்திரன் | கடல்வளம் |
| | | |
| | | |

# பரிசளிப்பு விழா - 2008/2009

## 2009ம் ஆண்டுக்குரிய சிறப்புப் பரிசுகள் விபரம்

| | |
|---|---|
| | தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை (2008ம் ஆண்டுப்பரீட்சை) |
| 1 | பரமானந்தராசா கோபிநாத் (127 புள்ளி) |
| 2 | செல்வராசா விதுஷன் (121 புள்ளி) |
| 3 | தனுஷா உதயகுமார் (118 புள்ளி) |
| | க.பொ.த (சா/த) பரீட்சை (2008ம் ஆண்டுப்பரீட்சை) |
| 1 | பிரதீபா பிறேம்குமார், 2.வி.வினோதிகா, 3.ச.உதயசங்கர், 4.இ.தனுசியா, 5.இ.சபேஸ்வரன், 6.மு.நரேன் 7. ஜெ. ஜெகரூபன், 8. செ. துஜேந்திரன் |
| | மெய்வல்லுநர் போட்டி |
| 1 | நம்பிராஜ் நரேந்திரன் |
| 2 | மாதுளானி மனோரஞ்சன் |
| 3 | சரண்யா குகதாஸ் |
| 4 | தர்ஷிகா பூலோசிங்கம் |
| | **தமிழ்த்தினப் போட்டி** |
| 1 | ***வில்லுப்பாட்டு*** |
| 1 | சிவஞானம் நிரோஜன் |
| 2 | இந்திரலிங்கம் யுகதீபன் |
| 3 | சிவனேந்திரன் ஐங்கரன் |
| 4 | மகேந்திரன் சுரேந்திரன் |
| 5 | ரவீந்திரசிகாமணி குகன் |
| 6 | சிவசோதி சாம்ஜெயவேல் |
| 7 | கோணேசப்பிள்ளை சொற்கோன் |
| 2 | ***சிந்து நடைக் கூத்து*** |
| 1 | சாருஜா நவகுலராசா |
| 2 | கஸ்தூரி பூலோகராசா |
| 3 | ஜோதினி சற்குணதாஸ் |
| 4 | சுகன்யா ஜெயக்குமார் |
| 5 | நிருசனா குகராசா |
| 6 | பிரகலதா தர்மகுலராசா |
| 7 | கமலினி சிவபாலசுப்பிரமணியம் |
| 8 | கவிதா தாமோதரம் |
| 9 | தர்ஷிகா செல்லத்துரை |
| 10 | மானுஜா சிவலிங்கம் |
| 11 | டிசாந்தி ஶ்ரீஸ்கந்தராசா |
| 12 | காயத்திரி தேவசிகாமணி |
| | மாகாணமட்ட சாரணர் போட்டியில் வெற்றியீட்டியோர் |
| | **உதைபந்தாட்டம் - 1ம் இடம்** |
| 1 | கணேஸ் ரமேஸ்குமார் |
| 2 | ரவி ஜெயந்தன் |
| 3 | கருணாகரன் விபூசுதன் |
| 4 | பரமசுந்தரம் அனந்தரூபன் |
| | **மென்பந்தாட்டம் - 3ம் இடம்** |
| 1 | றமணாகரன் பரந்தாமன் |

| | |
|---|---|
| 2 | கதிர்காமலிங்கம் பிரபாகரன் |
| **கிளித்தட்டு ~ 2ம் இடம்** | |
| 1 | ரமணாகரன் பரந்தாமன் |
| 2 | ரவி ஜெயந்தன் |
| 3 | பரமசுந்தரம் அனந்தரூபன் |
| **கயிறு இழுத்தல் ~ 2ம் இடம்** | |
| 1 | கணேஸ் ரமேஸ்குமார் |
| 2 | கதிர்காமலிங்கம் பிரபாகரன் |
| 3 | கருணாகரன் விபூசுதன் |
| **கரப்பந்தாட்டம் ~ 3ம் இடம்** | |
| 1 | ரமணாகரன் பரந்தாமன் |
| 2 | பரமசுந்தரம் அனந்தரூபன் |
| 46 வது தேசிய சாரணதிரளணி நிகழ்வில் பங்குபற்றி திறன்கள் தொடர்பான செயற்பாடுகளில் பங்குபற்றியமைக்காக சான்றிதழ் பெறுவோரின் விபரம் | |
| I | 1. செ.துஜேந்திரன் , 2. க.பிரபாகரன், 3. தி.பிரசன்னா, 4. ப. கஜந்தன், 5. து.முருகராஜ், 6. ப.பிரசாந் |
| 7. ப.சர்மதாஸ் , 8. கு.திவாகர், 9. செ.விதுஷன் | |
| | |
| **II.** | **மரதன் ஓட்டம் து.முருகராஜ் (பதக்கம் பெற்றவர்)** |
| | |

## நூலக பாவனை

| | | |
|---|---|---|
| 1 | சே. கஜேந்திரன் | தரம் - 3 |
| 1 | சி. தர்சன் | தரம் - 4 |
| 1 | ஆ. அனுசியா | தரம் - 5 |
| 1 | ப. கோபிநாத் | தரம் - 6 |
| 1 | சி. மகாலட்சுமி | தரம் - 7 |
| 1 | கசேசவி | தரம் - 8 |
| 1 | இ. தமிழ்நிலா | தரம் - 9 |
| 1 | ர. குகன் | தரம் - 10 |
| 1 | ஜெ. சுகன்யா | தரம் - 11 |

## கல்விக் கண்காட்சி (பாடசாலை மட்டம்)

| | | |
|---|---|---|
| 1 | இ. விதுசன் | தரம் - 1 |
| 2 | சி. தனுசியா, சி.பானுகோபன் | தரம் - 2 |
| 1 | வே. வபிசா | தரம் - 3 |
| | குழு(12பேர்) | தரம் - 4 |
| 1 | சி. தனுசிகா | தரம் - 5 |

### தரம் - 7

| | | |
|---|---|---|
| 1 | சி. மகாலட்சுமி, சௌ. வர்சினி | ஆங்கிலம் |

### தரம் - 8

| | | |
|---|---|---|
| 1 | நா. யதுர்ஷா (தரம் 8B) | விஞ்ஞானம் |
| 2 | நா. யதுர்ஷா (தரம் 8B) | புவியியல் |

### தரம் - 9

| | | |
|---|---|---|
| 1 | ச. பாமினி (தரம் 9B) | சமயம் |
| 2 | ச. யசிந்தா, பி. யோதிகா, பா. சரண்யா (தரம்9B) | நடனம் |
| 3 | இ. தமிழ்நிலா (தரம் 9A) | ஆக்கத்திறன் தொழில்நுட்பம் |

### தரம் - 10

| | | |
|---|---|---|
| 1 | ப. துஷாந்தினி (தரம் 10A) | வரலாறு |
| 2 | ர. குகன் (தரம் 10A) | வணிகமும் கணக்கீடும் |
| 3 | கு. பிறேம்நாத் (தரம் 10A) | கடல் நீர் வளம் |
| 4 | குழு (தரம் 10B) (6பேர்) | சங்கீதம் |
| 5 | ர. குகன் (தரம் 10A) | சுகாதாரமும் உடற்கல்வியும் |

### தரம் - 11

| | | |
|---|---|---|
| 1 | பூ. கஸ்தூரி | தமிழ் |
| 2 | சி. கமலினி , ச. யோதினி | கணிதம் |
| 3 | க. விபூசுதன் | சித்திரம் |

# பாடசாலையின் ஆளணி வளம்

| இல | பெயர் | சேவை வகுதி | கல்வித் தகமை | இப்பாடசாலைக்கு வருகை |
|---|---|---|---|---|
| 01 | திரு.ஆ.சிவநாதன் | அதிபர்-SLPS-2-II | முதுகல்விமாணி, கலைப் பட்டதாரி | 01-10-2006 |
| 02 | திருமதி.ந.திருநாவுக்கரசு | பகுதித்தலைவர் SLTS-Gr. I | பயிற்றப்பட்ட விஞ்ஞானம் | 01-03-1985 |
| 03 | திருமதி.ச.புலந்திரலிங்கம் | SLTS-2-I | பயிற்றப்பட்ட கணிதம் | 19-07-1993 |
| 04 | திருமதி.ம.அருந்தவராஜா | SLTS-2-I | கலைப் பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா-கல்வி | 01-09-1998 |
| 05 | திருமதி.சூ.சிவகுமார் | SLTS-2-I | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | 27-03-1990 |
| 06 | திருமதி.கோ.செல்வசிகாமணி | SLTS-2-II | பயிற்றப்பட்ட ஆங்கிலம் | 10-01-1997 |
| 07 | திருமதி.ய.திருக்குமார் | SLTS-2-II | வர்த்தகப் பட்டதாரி, பயிற்றப்பட்டஆரம்பக்க வி | 26-01-1998 |
| 08 | திருமதி.தே.அருள்வரதராஜன் | SLTS-2-II | கலைப் பட்டதாரி பயிற்றப்பட்ட வர்த்தகம் | 01-07-2003 |
| 09 | திருமதி.ஞா.நகுலேஸ்வரன் | SLTS-2-II | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | 01-07-2003 |
| 10 | செல்வி..ப.சுரேந்திரநாதன் | SLTS-2-II | கலைப் பட்டதாரி பயிற்றப்பட்ட விஞ்ஞானம் | 01-09-2004 |
| 11 | திருமதி.சி.திலகநாதன் | SLTS-3-I | முதுகலைமாணி, பட்டப்பின் டிப்ளோமா-நூல.தக.விஞ்ஞானம் | 07-09-2005 |
| 12 | திருமதி.பா.சுதர்சன் | SLTS-3-I | கலைப் பட்டதாரி | 07-09-2005 |
| 13 | திருமதி.சு.இராஜேஸ்கண்ணன் | SLTS-3-I | கலைப் பட்டதாரி | 07-09-2005 |
| 14 | திருமதி.வி.இராஜஅரவிந்தன் | SLTS-2-II | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | 07-02-2005 |
| 15 | செல்வி.ஞா.ஞானசுந்தரம் | SLTS-3-I | கலைப் பட்டதாரி | 14-09-2005 |
| 16 | செல்வி..அ.சின்னத்தம்பு | SLTS-2-II | பயிற்றப்பட்ட சங்கீதம் | 01-01-2007 |
| 17 | திருமதி.ந.குமுக்கேசன் | SLTS-3-I | வணிகமுகாமைத்துவ பட்டதாரி | 25-06-2007 |
| 18 | திருமதி.தே.ஜெகதாம்பிகைபாலன் | SLTS-2-II | கலைப் பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா-கல்வி | 01-01-2009 |

## கல்வி சாரா ஊழியர்கள்

| இல | பெயர் | சேவை வகுதி | கல்வித் தகமை | இப்பாடசாலைக்கு வருகை |
|---|---|---|---|---|
| 01 | திரு.சி.தர்மராசா | அலுவலகஊழியர் | | 29-09-1998 |

## தற்காலிக இணைப்புப் பெற்று கடமை புரியும் ஆசிரியாகள்

| இல | பெயர் | சேவை வகுதி | கல்வித் தகமை | இப்பாடசாலைக்கு வருகை |
|---|---|---|---|---|
| 01 | திரு.ப.ஜெயகரன் | SLTS-3-II | பயிற்றப்பட்ட உடற்கல்வி | 09-04-2008<br>23-07-2009வரை |
| 02 | திரு.சோ.சிவனேஸ்வரன் | SLTS-2-II | கலைப் பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா-கல்வி | 02-01-2009 |
| 03 | திரு.கு.மனோகரன் | SLTS-2-II | விஞ்ஞானப் பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா-கல்வி | 01-01-2009<br>01-09-2009வரை |
| 04 | செல்வி.வி.விசாகரட்ணம் | SLTS-3-I | நுண்கலைப்பட்டதாரி-நடனம் | 06-01-2009<br>14-09-2009வரை |
| 05 | திருமதி.த.காந்தருபன் | SLTS-3-I | கலைப் பட்டதாரி | 07-01-2009 |
| 06 | திரு.சோ சோமச்சந்திரன் | SLTS-3-II | டிப்ளோமா கடல்வளம் | 30-01-2009 |
| 07 | திருமதி.ஸ்ரீ.சுபேந்திரன் | SLTS-3-II | பயிற்றப்பட்ட விஞ்ஞானம் | 28-03-2007<br>16-08-2009வரை |
| 08 | திரு.ந.செல்வக்குமரன் | SLTS-3-I | நுண்கலைப்பட்டதாரி-சித்திரம் | 24-12-2007 |
| 09 | திரு.ஆ.பவானந்தன் | SLTS-2-II | பயிற்றப்பட்ட உடற்கல்வி | 01-10-2009 |
| 10 | திருமதி.த.சற்குணராசா | SLTS-3-I | பயிற்றப்பட்ட கணிதம் | 08-10-2009 |